தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, சிலர் சில பதிவான டாக்சிகாரர்களை அடிக்கடி வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அண்மையிலே அப்படி வழக்கமாக வருகிற டாக்சிகாரர்கள் உள்ளே வந்து, அழைத்து வந்தபோது, மற்ற டாக்சிகாரர்கள் எல்லாம் சூழ்ந்து கொண்டு கலாட்டா செய்கிறார்கள். அந்த வரிசைப்படிதான் வரவேண்டும் என்று சில பதிவுகளை வைத்துக்கொள்வதற்கு ஏதாவது மாற்றங்கள் அல்லது ஒழுங்கு முறையை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த கியூ வரிசையிலே அனுமதிக்கப்படுகிறது என்ற நல்ல செய்தியைத் தந்ததற்காக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி செலுத்துகின்றேன். வழக்கமாகப் போக வேண்டுமென்றால், சொந்தத்தில் கார் வைத்துக்கொள்வது நல்லது.

Scheme of Providing Cycle-Rickshaws

* 220 *Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) the number of pessons benefited under the Scheme of providing Cycle rickshaws in the place of hand-puuled rickshaws as on 31st July 1973; and

(*b*) the number of persons to whom cycle- rickshaws have to be given?

சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்.

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கை ரிக்ஷாக்களை அப்புறப்படுத்திவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கிய வகையில், 31—7—1973 ஆம் நாள் வரை, இவ்வித மாற்றுப்பலன் பெற்றுள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இனியும், எவ்வளவு பேர்களுக்கு வழங்கிட வேண்டியுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) கை ரிக்ஷாக்களை அப்புறப் படுத்திவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கும் முதலமைச்சர் நிவாரண நிதி யிலிருந்து இதுவரை 768 கை ரிக்ஷா தொழிலாளர்களுக்கு இலவசமாக

1974 மார்ச் 26]

சைக்கிள் ரிக்ஷாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர, 413 சைக்கிள் ரிக்ஷாக்கள் சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆக, 1,181 தொழிலாளர்கள் பலன் பெற்றுள்ளனர்.

(இ) சென்னை மாநகரத்தில் இன்னும் 77 கை ரிக்ஷாத் தொழிலாளர்களுக்கு இலவச சைக்கிள் ரிக்ஷாக்கள் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

திரு. காட்டூர் கோபால்: தலைவர் அவர்களே, நெடுங்காலமாகத் தொடர்ந்து இருந்து வந்த இந்தக் கொடுமை 1973 ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்களுடைய பிறந்தநாளின்போது நீக்கப்பட்டிருக்கிறது. இது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும். மனிதனை மனிதன் இழுக்கின்ற கொடுமை நீங்கியதை நினைவு கூரத்தக்க வகையில் அரசு ஏதேனும் நினைவுச் சின்னம் வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தச் சாதனை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழகத்தினுடைய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும். ஆகவே, நினைவுச் சின்னம் வைக்கவேண்டுமானுல், இந்தக் கை ரிக்ஷாக்களை மியூசியத்திலே வைப்பதுதான் நினைவுச் சின்னமாகும்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இன்னும் 77 நபர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா கொடுக்கப்படவேண்டியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானுல், இப்போதைக்கு அந்த 77 பேரும் என்ன செய்து கொண்டிருக்கின்றூர்கள்? மீண்டும் பழைய கை ரிக்ஷாக்களையே இழுத்துக் கொண்டிருக்கின்றூர்களா அல்லது சட்டப்படி அனைவரும் தடுக்கப்பட்டிருக்கின்றனரா? இப்போது பிழைப்பிற்கு என்ன செய்து கொண்டிருக்கின்றூர்கள்? அவர்கள் பிழைப்பிற்கு அரசு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இப்படி ரிக்ஷாக்களை இழுப்பவர்கள் அநேகமாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தான். ஒரு சில குறிப்பிட்ட மாதங்களில் சென்னைக்கு வந்து இந்தத் தொழிலில் ஈடுபட்டு, பிறகு அவர்கள் திரும்பச் சென்று விடுவதால், அவர்கள் எங்கே இருக்கின்றூர்கள் என்பதைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கின்றது. சைக்கிள் ரிக்ஷாக்களைக் கொடுக்கலாம் என்று அனுமதி அளித்ததில், ஏழு பேர் இறந்துவிட்டார்கள். மீதமுள்ள 70 பேர் எங்கே இருக்கின்றூர்கள் என்ற தகவல் இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, கை ரிக்ஷாக்களுக்குப் பதிலாக சைக்கிள் ரிக்ஷா கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது சென்னை நகரைப் பொறுத்த வரையில் என்றால், மற்ற மாவட்டங்களைப் பொறுத்து என்ன நிலை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே கை ரிக்ஷாக்களை இழுத்து பிழைப்பினை நடத்துகின்றவர்கள் மூன்று மாவட்டங்களிலே—அதாவது சென்னை, செங்கற்பட்டு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களிலேதான்—இருந்தார்கள். இந்த மூன்று மாவட்டங்களில் கை ரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்டதன் மூலம் தமிழ் நாட்டில் கை ரிக்ஷாக்கள் இல்லை என்ற நிலைமையை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

உடுக்குறியிடாத வினாக்கள்

Development of Madurai City as a Tourist Centre.

11 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the present plans of the Government to make Madurai more attractive to foreign and inland tourists; and

(*b*) the help, financial and otherwise, that is expected from the Central Government in this regard?

A.—

A statement @ is placed on the table of the House.

Medical Identification Cards.

12. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the N.G.G.Os. are supplied with Medical Identification Cards;

(*b*) if so, whether these cards are given to the Government 'B' Wing teachers; and

(*c*) whether these cards will also be given to aided school teachers?

A—

(*a*) Yes

(*b*) Yes

@ 82–83 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது